2006 ஆகஸ்ட் 23]

இல்லை; அதேபோல கால்நடை ஆய்வாளரும் வருவது இல்லை. மருத்துவமனை செயல்படாத நிலையில் உள்ள காரணத்தினால், அதைச் சீரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கால்நடைகளுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற இந்தத் துறையின் குறிக்கோளோடு செயல்படுவதற்காக, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எங்களைப் பணித்துள்ளார்கள், ஆணையிட்டுள்ளார்கள். நிச்சயமாக அனைத்துக் கிராமப்புற கால்நடைகளுக்கும் மருத்துவ வசதி கிடைக்க இந்த அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. உலகநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

80—

கூட்டுறவுச் சங்கம்

***688-திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீதான நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பிரத்தியேகமாக 5 விரிவாக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டு, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் திருத்துறைப்பூண்டி நகரம், தாலுகா தலைநகரமாக உள்ளது. இங்கே ஏழையெளியோர்கள் உற்பத்தி செய்கின்ற பாலைத் தனியார்கள் குறைந்த விலையில் கொள்முதல்

செய்கிறார்கள். அந்தப் பணமும் முறையாக அவர்களுக்குக் கிடைக்கவில்லை. எனவே, திருத்துறைப்பூண்டி நகரத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைத்தால் கொள்முதல் செய்வது உத்தரவாதப்படுத்தப்படும். அந்த ஏழையெளியவர்களுக்கும் பணம் முறையாகக் கிடைக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆண்டே பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் திருத்துறைப்பூண்டியில் தொடங்க பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தெரிவிப்பாரா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் முதல் கட்டமாக 30 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 5 விரிவாக்க அலுவலர்களைப் பிரத்தியேகமாகவும் நியமித்து, திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் பணி, தற்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மிக விரைவில், திருத்துறைப்பூண்டி தொகுதியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து, அவர்களிடமிருந்து பாலைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

திரு. இல. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்திலுள்ள கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்கு, சேலம் மாவட்டத்தில் இருக்கக்கூடிய கூட்டுறவு பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய விலையைவிட, ஒரு ரூபாய் குறைவாகக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, இதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுத்து, சேலம் மாவட்டத்திலே கொடுக்கக்கூடிய விலையைப்போல, தருமபுரி மாவட்டத்திலும் கொடுக்க ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினைப்பற்றி அதிகாரிகளைக்கொண்டு விசாரணை செய்து, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

2006 ஆகஸ்ட் 23]

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற அனைத்து மாவட்டங்களையும்விட, திருவண்ணாமலை மாவட்டத்தில் பால் உற்பத்தி அதிகமாக இருக்கிறது. எனவே, அதைப் பயன்படுத்தி, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவு பால் ஒன்றியத்திலேயிருந்து திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தை அமைக்கும் எண்ணம், இந்த அரசிடம் உள்ளதா என்பதைத் தங்களின்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்துகளுக்கேற்ப அந்தத் திட்டம் கொண்டு வருவதற்குத் தற்போது நடவடிக்கையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

3. தகவல் கோரல்

(அ) சேலம் மத்திய சட்டக் கல்லூரி மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு... (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். அவ்வளவுபேரும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் உள்ள தனியார் மத்திய சட்டக் கல்லூரி பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, அதன் அவசிய தன்மை கருதி, நேற்றைக்கே இந்த அலுவல்களையெல்லாம் ஒத்திவைக்க வேண்டுமென்று கோரி ஒத்திவைப்புத் தீர்மானம், நேற்றைக்கே எடுக்க வேண்டுமென்று கொடுத்திருந்தேன், இன்றைக்கு எடுத்தீர்கள். அதற்காகத் தங்களுக்கு என்னுடைய...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று ஒரு மணிக்குக் கொடுத்தீர்கள். இன்றைக்கே எடுத்துக்கொண்டோம். எப்படி?